தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**<u>ஆணை நாள். 12.05.2026</u>**

## <u>முன்னிலை</u>
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். CP 4843/F/2024</u>**

திரு.கார்த்திக் கண்ணா, -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு மாவட்டம்-603 111.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.கார்த்திக் கண்ணா, அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 20.05.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “Is “AGATHIAR AVENUE” a DTCP approved layout?” என்பன போன்ற தகவல்களை 11 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம்-603 111 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்,/ மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,

செங்கல்பட்டு மாவட்டம்-603 111 அவர்கள் ந.க.எண்.2838/2024/செமா.3, நாள் 24.07.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்கவில்லை என 12.10.2024 நாளிட்ட பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.2838/2024/செமா.3, நாள் 24.07.2024 தேதியிட்ட கடிதத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் எண்.CSAR/DTCP-M-87/127/L.P.No.89B-ன் வரைபட நகல் தங்கள் அலுவலக தொழில்நுட்ப பதிவறையில் இல்லை என்றும், அதனால் தான் மனுதாரர் கோரிய விவரம் வழங்கவழிவகை இல்லை என்ற தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தெரிவித்து அவற்றின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையற்ற தகவல்களாகவும், தவறான தகவல்களாகவும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து, **பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.**

- **மனுதாரர் 20.05.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்கள் தேடி பார்த்து கிடைக்கப்பெறாத பட்சத்தில் அது குறித்து மனுதாரருக்கு ரூ.100/- மதிப்பிலான அரசு முத்திரைத் தாளில் பிரமாணப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை மனுதாரருக்கு வழங்கிவிட்டு அதனை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரரின் 20.05.2024 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்கள் வழங்காகததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு**

**17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4843/F/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்-603 111.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,**
**திட்ட உதவியாளர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

**(<u>தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக</u>)**

**<u>மனுதாரர்</u>**

Thiru.Karthik kanna,
84-N 3A Cross 4th Main,
Hal III Stage New Thipaassandra,
Bangaluru-560 075.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-